**G.W.O.P.No.74/2022**

**PW.1** ஜெயராணி

20-02-2025 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

நான் 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். மைனர் குழந்தைக்கு என்னை கார்டியனாக நியமிக்கவேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு தற்பொழுது 57 வயதாகிறது. எனது கணவர் தற்போது உயிரோடு இல்லை. எனக்கு ஒரு மகள், இரண்டு மகன்கள் ஆகும். எனது மகள் காலமாகி விட்டார். இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள இளவர் எனது மகளின் குழந்தையாகும். எனது இரு மகன்களுக்கும் திருமணம் ஆகி விட்டது. எனது ஒரு மகன் குடும்பத்தோடு என்னோடுதான் இருக்கிறார். ஒரு மகன் சென்னையில் தனிக்குடித்தனத்தில் இருக்கிறார். நான் டைலரிங் தொழில் செய்து வருகிறேன். நான் தற்பொழுது வாடகை வீட்டில்தான் குடியிருந்து வருகிறேன். எனக்கு நிரந்தர வருமானம் என்று எதுவும் இல்லை என்று சொன்னால், நான் டைலரிங் தொழிலைக் கொண்டு வருமானம் ஈட்டி வருகிறேன். எனது மகளுக்கும், முதல்எதிர்மனுதாரருக்கும் 2013 ல் தூத்துக்குடியில் வைத்து திருமணம் நடந்தது. 2014 ல் இளவர் குழந்தை பிறந்தது. எனது மகளுக்கும் முதல் எதிர்மனுதாரருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு முதல் எதிர்மனுதாரர் 2015 ல் தூத்துக்குடி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார் என்றால், சரிதான். வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் எனது மகளும், முதல் எதிர்மனுதாரரும் சேர்ந்து

வாழ்ந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் இருவரும் சேர்ந்து வாழ்ந்த காரணத்தினால்தான் முதல் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த வழக்கை மேல் நடத்தாமல் வருகையின்மை காரணமாக அது தள்ளுபடியானது என்று சொன்னால், சரியல்ல. ஆனால் வாகது தள்ளுபடியாகிவிட்டது. எனது மகள் இறக்கும்வரை மைனர் குழந்தை முதல் எதிர்மனுதாரரோடு இருந்தது என்று சொன்னால் சரியல்ல. பிறந்ததிலிருந்தே குழந்தை என்னோடுதான் உள்ளது. நான்தான் எனது மகளை முதல் எதிர்மனுதாரரோடு வாழவைக்காமல் குழந்தையையும் தூத்துக்குடியிலிருந்து நான் கோயமத்தூருக்கு அழைத்து வந்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரர்தான் எனது மகளையும், குழந்தையையும் வேண்டாம் என்று ஒதுக்கி விட்டார். முதல் எதிர்மனுதாரர் குழந்தையை கேட்டு பலமுறை கோயமுத்தூர் வந்தும் நான்தான் கொடுக்க மறுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வயதாகி விட்ட காரணத்தினால் குழந்தையை என்னால் பராமரிக்க முடியாது அதனால் குழந்தையின் எதிர்காலம் பாதிக்கும் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி தாமாக முன்வந்து தனது மகள் இறந்த பின்பு, குழந்தைக்காக தான் இருசக்கர வாகனம் ஓட்டி பழகி குழந்தையை பள்ளிக்கு அழைத்துச் செல்வதாக கூறுகிறார். முதல் எதிர்மனுதாரர் நல்ல ஆரோக்கியத்துடன் இளவயதுடன்இருப்பதால் அவர்தான் குழந்தைக்கு தகுந்த பாதுகாவலராக இருக்க முடியும் என்று சொன்னால் சரியல்ல. அவர் குடிகாரராக இருக்கிறார். குழந்தையின் தந்தை நல்ல நிலையில் இருக்கும்போது மைனர் குழந்தைக்கு பாதுகாவலராக என்னை நியமிக்க நான் மனு தாக்கல் செய்ய இயலாது என்று சொன்னால், சரியல்ல. காரணம் முதல் எதிர்மனுதாரருக்கு அவரது குழந்தையை அடையாளமே தெரியாது. முதல் எதிர்மனுதாரர் குடிகாரர் என்றும், குழந்தையை

பார்க்கவேயில்லை என்று நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரருக்கு நான் இந்த மனுவில் எந்த குற்றச்சாட்டும் வைக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. பொய்யான தகவல்களுடன் நான்இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் எனது மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால், சரியல்ல.

ஓம்/ ஜெயராணி,

Taken down by me/ typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.